**IN THE COURT OF THE DISTRICT MUNSIF,**
**Present: Miss.D.V.Koperundevi, B.Com., LLB., (Hons),**
**District Munsif, Arni.**
**O.S.138/2019**

2025=ம் ஆண்டு ஜுலை மாதம் 29ம் நாள் செவ்வாய்கிழமை வாதி தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச்சட்டம் 1969, பிரிவு 3=ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

**P.W.1 சத்யா வயது 36, க/பெ வெங்கடேசன்**

**குறுக்கு விசாரணை**

நானும் பிரதிவாதியும் ஒரே ஊரை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். தாவா சொத்து முதலில் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றால் அதுப் பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்து மொத்தம் எவ்வளவு சென்ட் என்றால் 56 சென்ட் ஆகும். நான் மேற்படி சொத்தை கிருபானந்தம் மகன் கணேசன் மற்றும் கற்பகம், வரலட்சுமி ஆகியோரிடமிருந்து 23.02.2017 அன்று கிரையம் பெற்றேன்.

2. கிருபானந்தத்திற்கு சொத்து எவ்வாறு பாத்தியப்பட்டது என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. மூலப்பத்திரத்தை நான் பார்த்தேனா என்றால் பார்த்தேன். அது யார் பெயரில் இருந்தது என்றால் வெள்ளை கவுண்டர் பெயரில் இருந்தது. மேற்படி மூலப்பத்திரத்தை என்னிடம் கொடுத்துள்ளார்களா என்றால் கொடுத்துள்ளார்கள். அதை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

3. நான் மேற்படி பத்திரத்தை தாக்கல் செய்யாமல் தவறாக தாக்கல் செய்ததாக சொல்கிறேன் என்றால் சரியல்ல, நான் தாக்கல் செய்துள்ளேன். நான் கிரையம் வாங்கிய கிருபானந்தத்திற்கு இந்த தாவா சொத்து எப்படி பாத்தியப்பட்டது என்றால் பீதாம்பரம் என்பவரிடமிருந்து கிருபானந்தம் கிரையம் பெற்றுள்ளார். மேற்படி பீதாம்பரம் மற்றும் கிருபானந்தமும் உறவுக்காரர்களா என்றால் அதுப் பற்றி எனக்கு தெரியாது.

4. என்னிடம் காண்பிக்கப்படும் வாதுரையில் 5ம் பத்தியில் நான் 36 சென்ட் கிரையம் வாங்கியுள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சாட்சி படித்து பார்த்து விட்டு 36 சென்ட் தான் உள்ளது என்று கூறுகிறார். நான் கிரையம் பெற்ற போது தாவா சொத்து காலியிடமாக இருந்தது என்றால் சரிதான். வெள்ளை கவுண்டர் தாவா சொத்தை பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றாலும் என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.1 ல் வெள்ளை கவுண்டர் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்தார் என்றால் சாட்சி படித்து பார்த்து விட்டு சரி என்று கூறினார்.

5. மேற்படி தாவா சொத்து வா.சா.ஆ.1 ன் முன்னிலைக்கு பிரதிவாதிக்குதான் பாத்தியப்பட்டது என்றால் நான் வாங்கும் போது கிருபானந்தம் மகன் கணேசன் என்பவரிடமிருந்து கிரையம் பெற்றேன். அதன் பிறகு நாங்கள்தான் மேற்படி தாவா சொத்தை

அனுபவித்து வருகிறோம். வா.சா.ஆ.1 கிரையம் நடந்த பின்னர் யார் யார் பெயரில் சொத்து கிரையம் செய்யப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. அவர் மேற்படி சொத்தை எப்படி வாங்கினார் எப்படி விற்றார் என்று எனக்கு தெரியாது.

6. எனக்கு கிரையம் கொடுத்தவர் பெயரில் இந்த தாவா சொத்தின் பட்டா இருந்ததா என்றால் இருந்தது. நான் எனக்கு கிரையம் கொடுத்தவர் பெயரில் உள்ள பட்டாவை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எதற்காக வழக்கை பிரதிவாதிக்கு எதிராக நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் 2017ம் ஆண்டிலிருந்து நான் தாவா சொத்தை அனுபவித்து வருகிறேன். பிரதிவாதி அவர் ஆட்களை கூட்டி வந்து இந்த இடம் எங்களுடையது என்று சொல்லி மிரட்டிய காரணத்திற்காக நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். மேற்படி சம்பவம் நான் கிரையம் பெற்ற 10 நாட்களுக்கு பின்பு நடந்தது.

7. என்னிடம் காண்பிக்கப்படும் வாதுரையில் பத்தி 8ல் மூலக்காரணமாக மேற்படி சம்பவத்தை பற்றி நான் ஏதும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். ஆனால் ஆட்களை கூட்டி வந்து மிரட்டினார்கள் என்ற விவரத்தை சொல்லியுள்ளேன். பிரதிவாதி மற்றும் ஆட்களை கூட்டி கொண்டு வந்து என்னை மிரட்டினார்கள் என்று கூறியதற்கு எத்தனை ஆட்களை பிரதிவாதி கூட்டி கொண்டு வந்தார் என்றாலும், அவர்கள் உள்ளூர்காரர்களா என்றாலும் 10 பேருக்கு மேல் வெளியூர் ஆட்களை கூட்டி கொண்டு வந்து என்னை மிரட்டினார்.

8. மேற்படி சம்பவத்தை பற்றி எனது வாதுரை மற்றும் முதல் விசாரணையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் சாட்சி முதல் விசாரணையில் படித்து பார்த்து விட்டு சொல்லவில்லை என்று கூறினார். நான் பிரதிவாதி என்னை வெளியூர் ஆட்களை அழைத்து வந்து மிரட்டினார் என்பதற்காக காவல் நிலையத்தில் புகார் அளித்தேனா என்றால் இல்லை. சாட்சி தன்னிச்சையாக அதன் பிறகு 1 வருடம் கழித்து எஸ்.பி.அலுவலகத்தில் புகார் கொடுத்தேன். அது எது தொடர்பாக என்றால் மீண்டும் பிரதிவாதி மற்றும் 2, 3 ஆட்களை அழைத்து வந்து நான் வீடு கட்டும் போது மிரட்டியதற்காக புகார் கொடுத்தேன்.

9. மேற்படி புகாரை பற்றி எனது வாதுரை மற்றும் முதல் விசாரணையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. பிரதிவாதி சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என்று என்னிடம் தகராறு செய்தார் என்றால் சரிதான். சொத்து உரிமை யாருக்கு பாத்தியப்பட்டது என்ற பிரச்சினை உள்ள போது விளம்புகை பரிகாரம் கோராமல், நிரந்தர தடையுத்தரவு கோரிய பரிகாரம் சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. சொத்து என்னுடைய சொத்தாகும். மேற்படி சொத்தை நான் அனுபவித்து வருவதை காட்டும் ஆவணமாக பட்டா, தீர்வு ரசீது, வீட்டு வரி ரசீது அல்லது மின்சார கட்டணம் செலுத்தியதற்கான ரசீது இந்நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் பட்டா மற்றும் வரைபடம் நான் தாக்கல் செய்துள்ளேன்.

10. நான் வா.சா.ஆ.4 ஆவணத்தை கிரையம் பெற்ற பின்னர் பட்டா பெயர் மாற்றம் செய்ய வட்டாட்சியர் அலுவலகத்தில் மனு ஏதேனும் தாக்கல் செய்தேனா என்றால் கிரையம் பெற்றவுடனே சார்பதிவாளர் அலுவலத்திலிருந்து பட்டா பெயர் மாற்றம் செய்து விடுகிறார்கள். 2017க்கு முன் மேற்படி கிரைய சொத்திற்கான பட்டா மாற்றம் செய்யும் நடைமுறை இல்லை என்றால் மணியகாரர் (கிராம நிர்வாக அலுவலர்) மூலம் மேற்படி பட்டாவை நாங்கள் பெற்றோம்.

11. உரிமை இல்லாத நபரிடம் கிரையம் பெற்று விட்டு பிரதிவாதியிடம் தகராறு செய்கிறோம் என்றாலும், இவ்வழக்கை பொய்யான சங்கதிகளுடன் தாக்கல் செய்தோம் என்றாலும் தாவாவை செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றாலும் சரியல்ல. நான் எல்லா ஆவணங்களையும் சரி பார்த்துதான் கிரையம் பெற்றேன். ஆகையால் தாவா சொத்து என்னுடையதுதான். நான் எல்லா ஆவணங்களையும் சரி பார்த்துதான் கிரையம் பெற்றேன் என்பதற்கான சட்ட கருத்துரை பெற்றுள்ளேனா என்றால் சட்ட கருத்துரை பெற்றுள்ளேன். ஆனால் இந்நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the Plaintiffs / Defendants and admitted by the witness to be correct.

Sd/- D.V.Koperundevi
District Munsif,
District Munsif Court,
Arni.

**<u>IN THE COURT OF THE DISTRICT MUNSIF,</u>**
**<u>Present: Miss.D.V.Koperundevi, B.Com., LLB., (Hons),</u>**